# பொதுமக்களுக்கான அறிவித்தல்



IBSL
INSURANCE BOARD OF SRI LANKA

## இலங்கைக் காப்புறுதிச் சபை

(நிதி திட்டமிடல் அமைச்சு)

# நீங்கள் காப்புறுதி முகவர்மூலம் காப்புறுதிச் சேவையை பெறுவதாயின்...

இலங்கைக் காப்புறுதிச் சபையில் (IBSL) பதிவுசெய்துள்ள காப்புறுதி நிறுவனங்களும் காப்புறுதித் தரகு நிறுவனங்களும் 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்றுறை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய காப்புறுதி முகவர்களைப் பதிவுசெய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளன.

ஒருவர் காப்புறுதி முகவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு எத்தகைய குறைந்தபட்ச கல்வி மற்றும் பிரவேசத் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று IBSL நிர்ணயித்துள்ளது. இலங்கைக் காப்புறுதி நிலையம் (SLII) நடத்தும் ஆட்சேர்ப்பு முன்னோடிப் பரீட்சையில் சித்தியடைவதும் இதில் அடங்கும்.

காப்புறுதி முகவர்களாகப் பணியாற்ற இருப்பவர்களின் தகுதியை அத்தாட்சிப்படுத்துவதற்காக IBSLஇனால் நியமிக்கப்பட்டுள்ள காப்புறுதி நிலையம், அத்தகைய நபர்களின் திறமை மட்டத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்கு முறைகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு காப்புறுதி முகவரும் தனது தொழில் நடவடிக்கையில் ஈடுபடும்போது, தான் பதிவுசெய்துள்ள காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும். இந்த அடையாள அட்டையில் காப்புறுதி முகவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம், முகவர் பதிவுசெய்துள்ள (காப்புறுதி அல்லது தரகு) நிறுவனத்தின் பெயர் மற்றும் அதிகாரியின் கையொப்பம், முகவரின் குறியீட்டு இலக்கம் போன்ற விபரங்கள் அடங்கியிருக்கும்.

நீங்கள் காப்புறுதி முகவர் ஒருவரின் ஊடாக காப்புறுதி சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளும்போது, அந்த முகவர் உண்மையான அடையாள அட்டையை வைத்திருக்கிறாரா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டுமென நாம் ஆலோசனை கூறுகின்றோம். மேலதிக விளக்கம் தேவைப்படின், சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்துடன் அல்லது தரகு நிறுவனத்துடன் தொடர்புகொண்டு, அக் காப்புறுதி முகவர் உண்மையிலேயே சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் அல்லது தரகு நிறுவனத்தின் அதிகாரத்தைப் பெற்றவரா என்று அறிந்துகொள்ளவும்.

தயவுசெய்து காப்புறுதிப் பிரேரணைப் படிவத்தை நீங்களாகவே நிரப்புங்கள். விபரங்களை முழுமையாகவும் சரியாகவும் குறிப்பிடுங்கள். நீங்கள் பெற்றுக்கொள்வது நீங்கள் விரும்பிய காப்புறுதித் திட்டம்தானா என்பதை கையொப்பமிடுவதற்கு முன்னர் உறுதிப்படுத்துங்கள்.

பிரேரணைப் படிவத்தில் உண்மையானதும் சரியானதுமான விபரங்களைக் குறிப்பிடவும். நீங்கள் விரும்பிய காப்புறுதித் திட்டத்தைத்தானா பெற்றுள்ளீர்கள் என்பதை கையொப்பம் இடுவதற்கு முன் உறுதிசெய்துகொள்ளவும்.


பணிப்பாளர் நாயகம்

**இலங்கைக் காப்புறுதிச் சபை**

11ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01.

தொலைபேசி: 011 2396184-9 ∴பெக்ஸ்: 011 2396190

ஈ-மெயில்: info@ibsl.gov.lk இணையத்தளம்: www.ibsl.gov.lk